செய்தி வெளியீடு எண்–325　　　　　　　　　　நாள்– 2.5.2008

## <u>பெரம்பலூரில் புதிய ரேடியல் டயர் தொழிற்சாலை!</u>
## <u>அரக்கோணம் டயர் தொழிற்சாலை விரிவாக்கம்!</u>
## <u>900 கோடி ரூபாய் முதலீட்டில் 7,500 பேருக்கு வேலைவாய்ப்புகள்!</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில்</u>
## <u>எம்.ஆர்.எப். நிறுவனம் – தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்</u>

இந்தியாவின் முன்னணி டயர் தயாரிப்பு நிறுவனமாகிய எம்.ஆர்.எப் நிறுவனம் தொழில்வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு புதிய ரேடியல் டயர் தொழிற்சாலையை நிறுவிடவும், சென்னை அரக்கோணத்தில் உள்ள தனது ரேடியல் டயர் தொழிற்சாலையை விரிவுபடுத்திடவும் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், இன்று (2.5.2008) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில் துறைச் செயலாளர் திரு. எம்.எப். பாரூக்கி, இ.ஆ.ப., எம்.ஆர்.எப். நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.கே.எம். மாமேன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

எம்.ஆர்.எப். நிறுவனம் 900 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தவுள்ள இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் டிரக் மற்றும் கார் வாகனங்களுக்குத் தேவையான ரேடியல் டயர்களையும், இரண்டாம் கட்டத்தில் இரு மடங்காக 7 இலட்சம் ரேடியல் டயர்களையும் உற்பத்தி செய்திடத் திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலை முதற்கட்டத்தில் 2500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 5000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூரில் நிறுவப்படவுள்ள எம்.ஆர்.எப் நிறுவனத்தின் ரேடியல் டயர் தயாரிக்கும் கிரீன்பீல்டு தொழிற்சாலை அம்மாவட்டத்தில் வாழும் மக்களின் சமூக–பொருளாதார முன்னேற்றத்திற்குக் கணிசமான வகையில் உதவும். இந்த எம்.ஆர்.எப் தொழிற்சாலையும், பெரம்பலூரில் அமையவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலமும் அம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய வரலாற்றை உருவாக்கும்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு (ம) தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ஆ.இராசா, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., எம்.ஆர்.எப். நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு அருண் மாமேன், அந்நிறுவனத்தைச் சார்ந்த திரு. ராகுல் மாமேன் ஆகியோர்உடனிருந்தனர்.

***

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.